Sri Lanka Press Institute

# NEWSLETTER

RIGHT TO INFORMATION

பதிப்பு 02

ஜுலை 2021



த மோனிங் RTI பயிற்சியின் போது எடுக்கப்பட்ட புகைப்படம்

## இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் RTI உதவிமையத்தின் பத்திரிகை அலுவலகங்களுக்கான விஜயம்

RTI உதவி மையம் பத்திரிகை அலுவலகங்களுக்கான தனது வருடாந்த விஜயத்தினை தனது திட்டத்தின் ஒரு பகுதியாக ஒழுங்குபடுத்தியிருந்தது. இவ் விஜயம் வருடத்திற்கு 2 தடவைகள் இடம்பெறும். 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இது நடைமுறைப்படுத்தப்பட்டது. பத்திரிகை அலுவலகங்களுக்கு சென்று பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை நேரில் சந்தித்து RTI உதவி மையத்தின் செயற்பாடுகள் பற்றி விளக்குவதே இவ் விஜயத்தின் பிரதான நோக்கமாகும். அதன்படி சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில பத்திரிகைகளுக்கான 2019 விஜயம் வெற்றிகரமாக அமைந்திருந்தது.

2020 இல் ஏற்பட்ட கொவிட் 19 தொற்று காரணமாக இவ் விஜயத்தினை மேற்கொள்ள இயலாமல் போனது. அதனைத் தொடந்து 2021 இல் தொற்று நிலைமை சற்று குறைவடைந்தவுடன் மார்ச் மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் தனது விஜயத்தினை ஒழுங்குபடுத்தியிருந்தது. டெய்லி எக்ஸ்பிரஸ், டெய்லி மிரர், சிலுமின, தினகரன், த சண்டே மோனிங், த மோனிங், தேஷய, வீரகேசரி, தினக்குரல், சிலோன் டுடே, மவ்பிம, தமிழன், விடிவெள்ளி, மெட்ரோ போன்ற பத்திரிகை அலுவலகங்களிற்கு விஜயத்தினை மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது.

சில பத்திரிகைகள் தமது ஊடகவியலாளர்களிற்கு RTI பற்றிய அடிப்படை பயிற்சியொன்றினை வழங்கும்படி கோரிக்கை விடுத்திருந்தனர் அதன்படி 2021 இன் முதலாவது பயிற்சி “த மோனிங்” பத்திரிகையின் ஊடகவியலாளர்களிற்கு வழங்கப்பட்டது. இப் பயிற்சி ஏப்ரல் 7 ஆம் திகதி நடைபெற்றது. இதன்போது கமல் லியனாராச்சி வளவாளராக கலந்துகொண்டார். இதன்போது RTI இன் அறிமுகம், எவ்வாறு தகவல்களை கோருவது, எவ்வகையான தகவல்களை கோர முடியாது, எவ்வகையான தகவல்களை கோர முடியும், தகவல் கோரிக்கை படிவம் மற்றும் மேன்முறையீட்டு படிவங்களை எவ்வாறு நிரப்புவது போன்ற விடயங்கள் கற்பிக்கப்பட்டது. RTI உதவி மையத்தின் உதவியினை ஊடகவியலாளர்கள் எவ்வாறு பெற முடியும் என்பதும் விளக்கப்பட்டது. பங்குபற்றிய ஊடகவியலாளர்கள் RTI தொடர்பான தமது சந்தேகங்களை கேட்டு தெரிந்து கொண்டதோடு இந்தப் பயிற்சி தமக்கு பயனுள்ளதாக அமைந்ததாக கூறினர்.

வேறும் சில பத்திரிகை அலுவலகங்கள் தமது ஊடகவியலாளர்களிற்கும் இவ்வாறான பயிற்சியொன்றினை நடாத்தும் படி கோரியிருந்தனர். ஆனால் தற்போது நாட்டில் வேகமாக பரவி வரும் கொவிட் 19 காரணமாக அவற்றை நடாத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

# RTI ஊடகவியலாளர்கள் மன்றம்

ராகுல் சமந்த ஹெட்டியாரச்சி ஒன்றரை தசாப்தத்திற்கும் மேலாக ஊடகத்துறையில் ஒரு நிபுணராக பணியாற்றியுள்ளார்.

புலனாய்வு ஊடகவியல் மற்றும் சுற்றாடல் அறிக்கையிடல் ஆகிய துறைகளில் ராகுல் ஆர்வமுடையவர். அவர் தற்போது தனது ஊடக வாழ்க்கையில் புதிய பாதைகளை அமைத்து பிபிசி சிங்கள ஊடகவியலாளராகவும், “அத” பத்திரிகை மற்றும் தெரண தொலைக்காட்சி சேவை உள்ளிட்ட ஊடகங்களிற்கு பகுதி நேர ஊடகவியலாளராகவும் பணியாற்றுகிறார்.

ராகுல் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் (SLPI) RTI ஊடகவியலாளர் மன்றத்தின் உறுப்பினராக உள்ளார். விவரணக் கட்டுரைகள் மற்றும் புலனாய்வுக் கட்டுரைகளை எழுதுவதற்கு தகவல்களைப் பெறுவதற்காக அவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தினார். RTI சட்டத்தைப் பயன்படுத்தி அவர் இதுவரை 200 க்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார்.

“நான் எழுதிய வெற்றிக் கட்டுரைகளில் ஒன்றை நான் தேர்வுசெய்வதென்றால், மருத்துவ அலுவலகங்களிலுள்ள மைக்ரோ வாகனங்களின் பராமரிப்பு செலவுகள் பற்றிய வெளிப்படுத்துதல்களை குறிப்பிட விரும்புகிறேன். இந்தக் கட்டுரையை எழுதுவதற்கு நான்கு மாதங்கள் ஆனது.வாகனங்களின் மதிப்பை விட வாகனங்களின் பராமரிப்பிற்காக அதிக பணம் செலவிடப்பட்டதை என்னால் முன்னிலைப்படுத்த முடிந்தது. அதேபோல், இந்த பொறிமுறையின் முறைகேடுகள் மற்றும் அதன் மூலம் அரசு எதிர்கொள்ள வேண்டிய இழப்புகளை இந்தச் சம்பவம் முன்வைத்தது.”



**Rahul Samantha Hettiarachchi**

*"ஒரு ஊடகவியலார் அல்லது ஒரு பிரஜை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்துவது என்றால், அவர் சட்ட விதிகளின் முறையான நடைமுறைகளைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். இதன் மூலம் அவர்கள் தகவல்களை வெற்றிகரமாகப் பெற முடியும். எனவே அனைத்து பிரஜைகளையும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்".*

---

தகவலறியும் உரிமைச் சட்டத்தினை பயன்படுத்தி இவர் பல்வேறு கட்டுரைகளை எழுதியுள்ளார். அவற்றில், ஹட்டன் டிக்கோயா நகர சபைக்கு சொந்தமான மைதானத்தில் இடம்பெற்று வந்த விடயத்தை கூற வேண்டும். விளையாட்டு மற்றும் கலாசார நிகழ்வுகள் இடம்பெற்று வரும் இந்த மைதானத்தில், அரசியல்வாதிகள் எவராவது இறந்தால் இம்மைதானத்திலேயே எரிப்பது வழக்கம். இது சட்டத்தை மீறும் செயலாகும் என்பதால் மேற்படி நகரசபைக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஊடாக கேள்விகளை எழுப்பியிருந்தார். அதன் படி இனி இம்மைதானத்தில் எதிர்காலத்தில் இவ்வாறான விடயங்கள் இடம்பெறாது என்ற தீர்மானம் கொண்டு வரவுள்ளதாக பதில் கிடைத்தது. அதை தொடர்ச்சியாக அவர் பத்திரிகையில் வலியுறுத்தி வந்ததன் காரணமாக நகரசபையால் தீர்மானம் எடுக்கப்பட்டு தற்போது அது நிறுத்தப்பட்டுள்ளது. இது சிவலிங்கம் சிவகுமாரன் RTI இனை பயன்படுத்தி எழுதிய வெற்றிக் கதைகளில் ஒன்றாகும்.

இதுவரை சிவலிங்கம் சிவகுமாரன் 25 இற்கும் மேற்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஊடான செய்திகளை அறிக்கையிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

*“தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஊடான அறிக்கையிடலில் நான் மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பதன் காரணம் சட்டரீதியாக, அரசாங்கத்திடமோ அல்லது அரச நிறுவனங்களிடமோ இதன் மூலம் கேள்வி எழுப்ப முடியும் என்பதாகும். எனினும் இது ஊடகவியலாளர்களிடம் மட்டும் தங்கியிருக்கும் விடயமல்ல. இந்த பொறிமுறையை பொதுமக்களும் பாவிக்கும் வழிமுறைகள் ஏற்படுத்தப்படல் அவசியம்”.*

சிவலிங்கம் சிவகுமாரன் ஞாயிறு வீரகேசரி பத்திரிகையின் உதவி ஆசிரியராக பணியாற்றி வருகின்றார். ஊடகத்துறையில் இவரிற்கு 21 வருட அனுபவம் காணப்படுகின்றது. அதில் 19 வருடங்களாக எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (வீரகேசரி) இல் பணியாற்றி வருகின்றார். மேலும் சிவலிங்கம் சிவகுமாரன் மெட்ரோ நியூஸ் பத்திரிகை மற்றும் சூரியகாந்தி சஞ்சிகையின் ஆரம்பகால ஆசிரியராகவும் கடமையாற்றி இருக்கின்றார்.

அத்துடன் சிவலிங்கம் சிவகுமாரன் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் RTI ஊடகவியலாளர் மன்றத்தின் சிரேஷ்ட உறுப்பினராவார். இவர் மன்றம் ஆரம்பித்த காலத்திலிருந்து ஒவ்வொரு கூட்டங்களிலும் தவறாது கலந்துகொண்டு பெறுமதியான கருத்துக்களையும் RTI தொடர்பான தனது அனுபவங்களையும் பகிர தவறுவதில்லை.


**Sivalingam Sivakumaran**



# சமூக ஊடகங்களில் இடம்பெற்ற கருத்துக்கணிப்புகளின் முடிவுகள்


2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டம், பகிரங்க அதிகாரசபைகளிடமிருந்து பரந்த அளவில், வெளிப்படையன முறையில் தகவல்களை பெற பொதுமக்களிற்கு சந்தர்ப்பத்தினை வழங்குகின்றது. எனவே, பொதுமக்கள் தங்கள் தகவல் அறியும் உரிமையை தொடர்ந்து பயன்படுத்த வேண்டியது அவசியம். இதனடிப்படையில், இலங்கையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்த பொதுமக்களின் புரிதலை மதிப்பிடுவதற்காக, இலங்கை பத்திரிக்கை ஸ்தாபனம் அதன் சமூக ஊடக தளங்களில் (பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம்) தொடர் வாக்கெடுப்புகளை ஆரம்பித்தது.

## எந்தவொரு பொது அதிகாரசபையிலிருந்தும் பிரஜைகள் தகவல்களை அணுக முடியும் என்பது உங்களுக்குத் தெரியுமா?





தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், நாட்டின் எந்தவொரு பிரஜையும் எந்தவொரு பகிரங்க அதிகாரசபையிடமிருந்தும் தகவல்களைக் கோரலாம். அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து மட்டுமல்லாமல், தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்தும் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு தகவல்களைக் கோரலாம் என தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 43 கூறுகிறது.

## தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவலைப் பெற பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?




தகவல் அறியும் உரிமை அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டுமானால், தகவல்களை எளிதாகப் பெறுவதற்கான நடைமுறைகளை மேற்கொள்வது அவசியம். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்களைப் பெற விரும்பும் எந்தவொரு நபரும் அந்தந்த தகவல் அலுவலகரிடமும் எழுத்துப்பூர்வமான கோரிக்கையினை முன்வைக்க வேண்டும். தகவல் அலுவலர் உங்கள் விண்ணப்பத்தை 14 நாட்களுக்குள் ஏற்க வேண்டும் அல்லது நிராகரிக்க வேண்டும். இது ஒரு நபரின் தனிப்பட்ட வாழ்க்கை அல்லது தனிப்பட்ட சுதந்திரத்தை உள்ளடக்கியிருந்தால், 48 மணி நேரத்திற்குள் தீர்மானம் எடுக்கப்படும்.

## தகவலறியும் உரிமைச் சட்டம் மூலம் பொது அதிகாரிகளிடமிருந்து தகவல்களைப் பெற்றிருக்கின்றீர்களா?




பகிரங்க அதிகாரசபைகளிடம் உள்ள எந்த தகவலையும் நீங்கள் கேட்கலாம். பொதுமக்கள் தகவல்களை இலகுவாகவும் எவ்வித சிரமமுமின்றி அணுகுவதற்கான வசதியை பகிரங்க அதிகாரசபைகள் வழங்க வேண்டும். அரசாங்க கோவைகளை அணுகுவதற்கான வசதியை வழங்கும்போது, அந்த தகவலை ஆய்வு செய்ய உங்களுக்கு உரிமை உண்டு குறிப்புகளை எடுத்துக் கொள்ளுங்கள், சான்றளிக்கப்பட்ட நகல்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

பதிப்பு 02 | ஜூலை 2021

# Success Stories

www.rtisrilanka.lk

கொவிட் – 19 இன் பரவல் எமது நாட்டில் நாளுக்கு நாள் வீரியமடைந்து வருகின்றது. இதன் காரணமாக மரணங்களின் எண்ணிக்கையும் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றன.

எனினும் இந்த மரணங்கள் தொடர்பில் பகுப்பாய்வு செய்யப்பட்ட தேசிய ரீதியான அறிக்கைகளொன்றும் சுகாதார அமைச்சினால் வெளியிடப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பான தகவல்களை பெறும் நோக்கில் கடந்த மார்ச் 5ஆம் திகதி 2021 அன்று சுகாதார அமைச்சின் பொதுச் சுகாதார சேவைகளுக்கு பொறுப்பான பிரதி பணிப்பாளர் நாயகத்திடம் எழுத்து மூலமான கோரிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த கோரிக்கைக்கு பதிலளிக்குமாறு அமைச்சின் கீழுள்ள தொற்று நோயியல் விஞ்ஞான பிரிவின் அப்போதைய பணிப்பாளர் டாக்டர் சுதத் சமரவீரவிற்கு எழுத்து மூலம் பிரதி பணிப்பாளர் நாயகம் அறிவுறுத்தியிருந்தார்.

*2021.05.28 வரையான தரவுகளை அடிப்படையாகக் கொண்டவை


## வயது, பால், இன அடிப்படையில் மரணங்கள்

| | சிங்களவர் | | முஸ்லிம் | | தமிழர் | | பறங்கியர் | | வெளிநாட்டவர் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வயதெல்லை | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 00-09 | 0 | 1 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 10-19 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 20-29 | 1 | 4 | 2 | 1 | 2 | 1 | 0 | 0 | 0 | 0 |
| 30-39 | 15 | 10 | 1 | 2 | 2 | 0 | 0 | 0 | 1 | 0 |
| 40-49 | 40 | 32 | 13 | 10 | 5 | 4 | 0 | 0 | 1 | 0 |
| 50-59 | 79 | 41 | 23 | 10 | 11 | 6 | 1 | 0 | 1 | 0 |
| 60-69 | 140 | 85 | 48 | 24 | 23 | 15 | 1 | 0 | 2 | 0 |
| 70-79 | 169 | 127 | 51 | 24 | 28 | 22 | 1 | 0 | 2 | 0 |
| 80 மேல் | 107 | 97 | 19 | 13 | 21 | 17 | 0 | 1 | 0 | 0 |
| மொத்தம் | 552 | 398 | 160 | 85 | 92 | 65 | 3 | 1 | 7 | 0 |
| | 950 | | 245 | | 157 | | 4 | | 7 | |

உயிரிழந்தவர்களின் சமயம் தொடர்பான விடயம் தொற்று நோயியல் விஞ்ஞானப் பிரிவினால் சேகரிக்கப்படவில்லை




## மாவட்ட (RDHS) ரீதியில் கொவிட்-19 மரணங்கள்




கொழும்பு மாநகரம் - 236

- தொற்றுக்குள்ளானவர்கள் - 177,711
- உயிரிழந்தவர்கள் - 1,363 (2020.03.28 - 2021.05.28)
- முதலாவது மரணம் - 28.03.2020 இல் நிகழ்ந்தது
- அதிகூடிய வயது மரணம் - 104 வயது பெண் (காலி, ஹினிமெல்லஹக)
- அதிகுறைந்த வயது மரணம் - 20 நாட்களான ஆண் குழந்தை (கொழும்பு 15)
- இற்றைப்படுத்தப்பட்டது • அதிகுறைந்த வயது மரணம்: 08 நாட்களான குழந்தை 09.06.2021 அன்று மரணித்துள்ளது. (புசல்லாவ, கம்பொல)

## மரணங்கள் பதிவான இடங்கள்



- வைத்தியசாலை, தனிமைப்படுத்தல் நிலையம் - 1,044
- **வைத்தியசாலையில் அனுமதிக்கும் போது** - 115
- வீடு - 195
- வீதி, ஏனையவை - 9

மொத்த மரணங்கள் - 1,363

### வைத்தியசாலைகள்

ஆதார வைத்தியசாலை, ஹோமாகம - 165
ஐ.டி.எச். வைத்தியசாலை - 111
இலங்கை தேசிய வைத்தியசாலை - 70
தள வைத்தியசாலை, முல்லேரியா - 69
போதனா வைத்தியசாலை, கராப்பிட்டிய - 64
தேசிய வைத்தியசாலை, கண்டி - 58
தனியார் வைத்தியசாலைகள் (8) - 40
மாவட்ட ஆதார வைத்தியசாலை, தெல்தெனிய - 37
இடைத்தங்கல் பராமரிப்பு நிலையங்கள் (6) - 22

தகவலறியும் சட்டம் மூலம் சுகாதார அமைச்சிடம் பெற்றுக்கொண்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஊடகவியலாளர் றிப்தி அலியினால் தயாரிக்கப்பட்டது

மேலும் கதைகளை பார்வையிட SLPI இன் அதிகாரப்பூர்வ இணையதளத்தை அணுகலாம்.

rtisrilanka.lk

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

No.96, Kirula Road, Colombo 05.
Email: info@slpi.lk
Tel: +94 011 5 353 635
Fax: +94 011 5 335 500

© Sri Lanka Press Institute : 2021